அடையாள இலக்கம்:

H ☐☐☐☐☐☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2016

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

## அடிப்படை எழுத்தறிவுப் போட்டி

## அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(5 புள்ளிகள்)

1) நேற்று புகையிரதம் தாமதமானதால் நாங்கள் பாடசாலைக்குப் பிந்திச் ______________ .

அ) சென்றோம் ஆ) வருவோம்

இ) செல்லுவோம் ஈ) செல்லவேண்டும்

2) தமிழ்ப் பாடசாலைக் கலைவிழாவிலே பிரதம விருந்தினர் ______________ நிகழ்த்தினார்.

அ) உறை ஆ) உரை

இ) உலை ஈ) உழை

3) மணமகன் மணப்பெண்ணின் கழுத்தில் ______________ கட்டினான்.

அ) தாலி ஆ) தாளி

இ) வேலி ஈ) தாயம்

4) ஆரோக்கியமான மாணவன் ______________ இருப்பான்.

அ) கடுகடுப்பாக ஆ) சுறுசுறுப்பாக

இ) மெதுமெதுப்பாக ஈ) சோம்பலாக

5) நம்நாட்டில் தானியம் ______________ நிலங்கள் அதிகம் உள்ளன.

அ) விலையும் ஆ) விழையும்

இ) விளையும் ஈ) விரையும்

**(ஆ) கீழேயுள்ள வாக்கியங்களிற் காணப்படும் (கீழ்க்கோடிடப்பட்ட) வினைச்சொற்களின் காலத்தை மாற்றி எழுவாய் பயனிலைகளுக்குப் பொருந்துமாறு கோடிட்ட இடங்களை ஏற்ற வினைச்சொற்களால் நிரப்புக.** (10 புள்ளிகள்)

1) நேற்று நான் தம்பியுடன் **விளையாடினேன்.**

நாளையும் நான் தம்பியுடன் ______________________.

2) நாங்கள் சென்ற ஆண்டு பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வெற்றி **பெற்றோம்.**

நாங்கள் வருகிற ஆண்டும் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வெற்றி ______________.

3) நாளைக்குக் கண்ணன் எங்கள் வீட்டுக்கு **வருவான்**.

நேற்றுக் கண்ணன் எங்கள் வீட்டுக்கு ____________________.

4) இன்று சந்தையில் மக்கள் பொருள்களை **வாங்கினார்கள்**.

நாளைக்கு நானும் சந்தையிற் பொருள்களை ________________.

5) இந்த வருடம் நான் எட்டாம் வகுப்பிற் **படிக்கிறேன்**.

அடுத்த வருடம் நான் ஒன்பதாவது வகுப்பிற் ________________.

**(இ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (10 புள்ளிகள்)

(1) பூ + தோட்டம் = ______________________

(2) கொடி + ஏற்றினோம் = ______________________

(3) தமிழ் + பாடம் = ______________________

(4) பால் + குடம் = ______________________

(5) காடு + தீ = ______________________

## (ஈ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக. (10 புள்ளிகள்)

(1) ஆட்டுக்குட்டி = ____________ + ____________

(2) மாஞ்சோலை = ____________ + ____________

(3) மட்பானை. = ____________ + ____________

(4) கடற்படை = ____________ + ____________

(5) கற்றூண் = ____________ + ____________

## (உ) கோடிட்ட இடத்திலே பொருத்தமான சொல்லை எழுதி வசனத்தைப் பூர்த்தி செய்க. (20 புள்ளிகள்)

(1) வரவுக்கு மீறிச் ____________ செய்யக்கூடாது.

(2) தைப்பொங்கற் ____________ தமிழர்களுக்கு மிகவும் முக்கியமானது.

(3) எனது தாத்தா தினமும் செய்திகளை ____________ கேட்பார்.

(4) 'அறம் செய விரும்பு'. '____________ சினம்'

(5) அவுஸ்திரேலியாவின் தேசியக்கொடியில் ஆறு ____________ உள்ளன.

(6) இராவணன் ____________ நாட்டு மன்னன்.

(7) வானவில்லிலே ____________ நிறங்கள் காணப்படும்.

(8) வேகமாகப் புயற்காற்று ____________ மரங்கள் எல்லாம் சாய்ந்தன.

(9) நாய் ஒரு நன்றியுள்ள ______________________.

(10) மாம்பழம், ______________________ , வாழைப்பழம் ஆகியவற்றை முக்கனிகள் என அழைப்போம்.

**(ஊ) எதிர்ப் பொருள் தரும் சொல்லை எழுதுக.** (5 புள்ளிகள்)

(1) பகல் - ______________________

(2) பின்னால் - ______________________

(3) முடிவு - ______________________

(4) மெதுவாக - ______________________

(5) பகைவன் - ______________________

**(எ) ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.** (5 புள்ளிகள்)

1) தாய் - ______________________

2) சூரியன் - ______________________

3) காடு - ______________________

4) மனை - ______________________

5) கேள்வி - ______________________

(ஏ) கீழே தரப்பட்ட படத்தொடரைக் கவனமாகப் பார்க்கவும். கருத்தை விளங்கிக் கொள்ளவும். கதை விளங்கும்படியாகக் குறைந்தது ஐந்து (5) வசனங்களை எழுதுக.

கீழே கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தலாம். (15 புள்ளிகள்)

## கதைத் தலைப்பு: சிறுவன் திருந்தினான்



| | | |
|---|---|---|
| சிறுவன் ஒருவன் | வீட்டைவிட்டு | பரிதாபமாக |
| நல்ல மனிதர் | இரக்க குணம் | அனாதை |
| தங்கத் தட்டை | காலில் விழுந்து | காவலர்கள் |
| ஓடிவிட்டான் | நல்லவரிடம் | தானே கொடுத்ததாக |
| தூங்கிக்கொண்டிருக்கும்போது | | |

1. ______________________________________________

______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

______________________________________________

(ஐ) பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக்குக.
(10 புள்ளிகள்)

உதாரணம்: பறவை – பறவைகள்

(1) கடிதம் - ____________

(2) படம் - ____________

(3) நான் - ____________

(4) நாய் - ____________

(5) பூ - ____________

(ஒ) கீழே தரப்பட்ட தொழில் செய்பவர்களுக்குரிய தொழிற் பெயர்களை கோடிட்டு இணைக்கவும். (5 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| 1) | பலனை எதிர்பாராமற் சேவை செய்பவர் | ஒற்றர் |
| 2) | முடி திருத்துபவர் | வழக்கறிஞர் |
| 3) | உளவு பார்ப்பவர் | நூலகர் |
| 4) | நூல் நிலையத்தை நிர்வகிப்பவர் | நாவிதர் |
| 5) | நீதிமன்றில் வழக்காடுபவர் | தொண்டர் |

(ஓ) கீழே தரப்பட்டவற்றில் மிகவும் பொருத்தமானவற்றைக் கோடிட்டு இணைக்கவும். (5 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| 1) | மகாபாரதம் | சிலம்பு |
| 2) | கம்பன் | கருமுகில் |
| 3) | கண்ணகி | கொள்ளு |
| 4) | மழை | வில்லிபுத்தூரர் |
| 5) | குதிரை | இராமாயணம் |